அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபம்

கிறிஸ்தவுக்குள் விடுதலை

கலாத்தியருக்கு எழுதின நிருபம்

- கலாத்தியா பிரதேசம் அனடோலியாவின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் மலைப்பகுதியில் உள்ள புராதன இடம். தற்போதைய துருக்கியின் பகுதி.
- கிபி 25ல் கலாத்தியா அகஸ்துராயனால் ரோமபேரரசின் கீழ் கொண்டுவரப்பட்டு ரோம மாகாணமாக்கப்பட்டது.
- கலாத்தியாவின் பட்டணங்களான அந்தியோகியா, பிசீதியா, இக்கோனியா, லிஸ்தீரா, தெர்பை ஆகிய இடங்களில் பவுல் தனது மிஷனரிப்பயணத்தின்போது நேரம் செலவிட்டிருக்கிறார் (அப்16:6,18:23)
- அதிகாரங்கள் 6
- வசனங்கள் 149

பின்னணி

- கலாத்தியா பகுதியில் உள்ள சபைகள் பிரச்சினைகளை சந்தித்து வந்ததால் இந்த நிருபம் எழுத நேரிட்டது.
- மனிதனின் கிரியைகளினால் அல்ல விசுவாசத்தினாலேயே நீதிமானாக முடியும் என்னும் மிகமுக்கியமான சத்தியத்தை யூதசட்டவாதிகள் ஏற்றுக் கொள்ளாமல் மறுத்து மோசேயின் சட்டங்களை கிறிஸ்தவர்கள் கைக்கொள்ளவேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்கள்.
- குறிப்பாக யூதசட்டவாதிகள் புறஜாதியார் இரட்சிக்கப்பட வேண்டுமானால் அவர்கள் விருத்தசேதனம் செய்துகொள்ளவேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.
- அதாவது ஒருவன் கிறிஸ்தவனாவதற்கான தகுதியை பெறவேண்டுமானால் முதலாவது யூதமார்க்கத்திற்கு அவன் மாறவேண்டும் என்று நிர்ப்பந்தித்தார்கள்.
- இந்த எதிர்ப்பாளர்கள் கலாத்தியாவில் சபைகளை நிறுவின பவுலை களங்கப்படுத்தினார்கள் (4:17)
- அவர்களது தாக்குதல் பலவழிகளிலும் அமைந்திருந்தது.
- முதலாவது இந்த எதிர்ப்பாளர்கள் பவுலை எருசலேம் அப்போஸ்த லர்களை மீறி நடந்துகொள்கிற ஒரு துரோகியாக சித்தரித்தார்கள். இதற்கான பதிலை 2:1-10ல் பவுல் கொடுத்தார்.
- இரண்டாவது, சில நாட்களுக்கு முன்பாகத்தான் பவுல் பேதுருவோடு புறஜாதியார் கிறிஸ்தவர்களாவதற்கு யூதர்களாக மாறவேண்டும் என்று சுவிஷேசம் சொல்லுகிறதா என்கிற விவாதத்தை நடத்தியிருந்தார். இதை இந்த எதிர்ப்பாளர்கள் சொல்லியிருக்கலாம். பேதுருவுடன் நடந்த விவாதத்தை குறித்து 2:11-14ல் பவுல் குறிப்பிடுகிறார்.
- மூன்றாவது இந்த எதிர்ப்பாளர்கள் பவுல் முன்பு விருத்தசேதனத்தை பிரசங்கித்ததாகவும்(5:11) ஆனால் தற்போது இலகுவாக புறஜாதிகளை இழுத்துக்கொள்வதற்காக தனது செய்தியை மாற்றிக்கொண்டுள்ளார் என்ற தவறான கருத்தை பரப்பியிருக்ககூடும் (1:10)

பின்னணி

- பவுல் தான் கிறிஸ்துவிடம் இருந்து நேரடியாக பெற்ற வெளிப்பாடே மாற்றத்திற்கான காரணம் என்று பதிலளித்தார் (1:11-24)
- பவுல் இந்த நிருபத்தை எழுதின வேளையில், அவர்கள் சுவிஷேசத்தை தள்ளிவிட்டு அதன் மூலமாக தேவனையே விட்டுவிலகுகிற போக்கில்தான் இருந்தார்கள் (1:6-7).
- அவர்கள் "நியாயப்பிரமாணத்திற்கு கீழ்பட்டிருக்க"(4:21,5:1)விரும்பி விருத்தசேதனம் செய்துகொள்ளவும் தயாரானார்கள் (5:2).
- 'வேறொரு சுவிசேஷத்திற்கு திரும்புகிறது' (6:1) இலகுவானதாய் இருக்கவில்லை.
- சமுதாயத்தில் பிளவு ஏற்பட்டது (5:15,6:3-5)
- கலாத்திய சபைகளுக்கு இந்த துர்உபதேசம் போதிக்கப்படுவதை அறிந்த பவுல், யூதசட்டவாதிகளின் விபரீதமான போக்கை கண்டிக்கவும், கிறிஸ்துவுக்குள் பெற்ற விடுதலையை வலியுறுத்தவும் இந்த நிருபத்தை எழுதினார்.
- சுவிஷேசத்தின் எளிமையான சத்தியத்திற்கு அவர்கள் திரும்பவேண்டியதற்கான காரணங்கள் பலவற்றை இதில் குறிப்பிடுகிறார்.
- கிறிஸ்துவின் மரணம் புதிய உடன்படிக்கையின் காலத்திற்குள் நம்மை கொண்டுவந்திருக்கிறது (3:23–26,4:4–5,24)
- கிறிஸ்தவர்களாவதற்கு யூதர்களாவதோ அல்லது மோசேயின் சட்டங்கள் சொல்லும் வெளிப்படையான சடங்குகளை செய்வதோ அவசியமில்லை (2:3,11–12,14,4:10).
- இவ்வாறு செய்யும்படி கட்டாயப்படுத்தப்படுவது நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல விசுவாசத்தினாலேயே நீதிமான்களாக முடியும் என்கிற சுவிஷேத்தின் நோக்கத்தையே சிதைக்கிறதாயிருக்கிறது (2:16).

கிறிஸ்துவுக்குள் விடுதலை

- இந்த நிருபத்தின் கருத்துருவை 5:1ம் வசனம் விளக்குகிறது.ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்.
- "கிறிஸ்தவர்களின் விடுதலையின் அறிக்கை" என்று இந்த நிருபம் அழைக்கப் படுகிறது.
- இந்த நிருபத்தில் விசுவாசிகளுக்கு தேவனோடிருக்கும் புதிய ஐக்கியம் விளக்கப்படுகிறது.
- நாம் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.
- நாம் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.
- நாம் தேவனுடைய பிள்ளைகளாக புத்திர சுவீகாரம் பெற்றிருக்கிறோம்.
- நாம் யூதர்களாயிருந்தாலும், இராவிட்டாலும் ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாராக எண்ணப்படுகிறோம்.
- பாவம் நம்மை செய்யமுடியாதபடி தடுத்த, நியாயப்பிரமாணம் நம்மை செய்ய அனுமதிக்காத, நற்கிரியைகளை செய்ய பரிசுத்த ஆவியினாலே பெலப்படுத்தப் படுகிறோம்.

கலாத்தியரில் காணப்படும் முக்கிய கருத்துக்கள்

- இயேசு சகல கிறிஸ்தவர்களுக்காகவும் பாவத்தை சுமந்து பதிலாளாக மரித்தார். அதனால் அவர் அவர்களை ஒரு புதிய விடுதலைக்குள்ளும், ஜீவனுக்குள்ளும் கொண்டுவருகிறார் (1:4,2:20,3:13).
- கிறிஸ்துவின் சுவிஷேசம் தேவனிடத்திலிருந்து மாத்திரமே வந்ததேயன்றி மனிதனின் எந்த வளங்களிலிருந்தும் வரவில்லை. அதற்கான ஜீவனுள்ள சாட்சியாக பவுல் இருக்கிறார். அவர் கிறிஸ்துவினிடத்திற்கு மாற்றப்பட்டதும், அவர் அப்போஸ்தலரா னதும் எந்த மனித முயற்சியினாலும் உண்டானதல்ல.அது கிறிஸ்துவினிடத்தில் இருந்துவந்த நேரடி வெளிப்பாட்டின் மூலமே வந்தது (1:1,11–12,15–20).
- இரட்சிப்பு நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால்ல அது விசுவாசத்தால் வருகிறது அந்த விசுவாசம் நீதிமானாகும்படிக்கு நம்மை நடத்துகிறது (2:16).
- விசுவாசத்திற்கு உதவியாக விருத்த சேதனமும், மோசேயின் சட்டங்களும் தேவைப்படுமானால் அது கிருபை,விடுதலை என்னும் நிலைகளில் இருந்து விழுந்து முழுமையான நியாயப்பிரமாண சட்டங்களுக்கு கீழும் அதன் சாபங்களுக்கு கீழும் வந்துவிடும். நியாயப்பிரமாண சட்டங்களை பரிபூரணமாக நிறைவேற்றுவது சர்தியமற்றது (2:12–14,16,3:10,4:10,5:3).
- விசுவாசிகள் பாவத்திற்காக கிறிஸ்துவுடன் மரித்துள்ளார்கள் ஆகவே அவர்கள் மாம்சத்தை வெறுத்துவிட்டார்கள் (5:24,6:14).
- கிறிஸ்தவ வாழ்க்கையின் வல்லமைக்கும், வழிகாட்டுதலுக்கும் பரிசுத்த ஆவியானவரே ஆதாரம். அவர் விசுவாசிக்குள் அன்பையும், விசுவாசத்தையும் உருவாக்குகிறார் (5:6,16,18,25)
- கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதே கிறிஸ்துவுக்கு பிரியமானது. இதற்கு கிறிஸ்துவின் சிலுவைக்காக உபத்திரவங்களையும் சகிப்பதற்கான விருப்பம் அவசியம் (1:10,6:12,14)

கலாத்திய நிருபத்தின் முக்கிய பகுதிகள்

அறிமுகம் (1:1-10)

வாழ்த்து 1:1-5

கடிதத்திற்கான காரணம் 1:6-10

பவுல் தனது அப்போஸ்தலத்துவத்தை ஏற்காதவர்களுக்கு எதிரான வாதத்தை முன்வைத்தல் (1:11-2:21)

அவரது சுவிஷேசத்தின் தெய்வீக ஆரம்பம் 1:11-17

அவரது சுவிஷேசம் தேவனிடத்திலிருந்து நேரடியாக வந்தது 1:11-12

கிறிஸ்தவனாவதற்கு முன்னான வருஷங்களும் அவரது மாற்றமும் 1:13-17

மற்ற அப்போஸ்தலர்களோடு அவருக்குள்ள உறவு 1:18-2:21

- பேதுருவை முதலாவது முறை சந்தித்தல்: கிறிஸ்தவனான ஆரம்ப ஆண்டுகள் (1:18-24)
- எருசலேம் சபையில் 2:1-5
- யாக்கோபு, கேபா, யோவானின் அங்கீகாரம் 2:6-10
- அந்தியோகியாவில் பேதுருவை எதிர்த்தல் 2:11-21
- பேதுருவின் மாய்மாலம் 2:11-13
- பேதருவை நோக்கி கிறிஸ்துவுக்குள் நாம் எவ்வாறு நீதிமானாக்கப்பட்டோம் என்பதை உரைத்தல் 2:14-21

விசுவாசத்தினால் நீதிமானாகுதல் என்னும் சுவிஷேசத்திற்கு ஆதரவான வாதங்களை முன்வைத்தல் (3:1-4:31)

தனிப்பட்ட விவாதம் 3:1-5

- அவர்கள் ஆவியை பெற்றது எப்படி 3:1-4
- அவர்கள் ஆவியை யாரிடத்திலிருந்து பெற்றார்கள் 3:5

வசனத்தின் அடிப்படையிலான விவாதம் 3:6-25

- ஆபிரகாமின் எடுத்துக்காட்டு 3:6-9
- நியாயப்பிரமாணத்தின் சாபம் 3:10-14
- நியாயப்பிரமாணத்திலும் முக்கியத்துவம் வாய்ந்த வாக்குத்தத்தம் 3:15-18
- நியாயப்பிரமாணத்தின் நோக்கம் 3:19-25

நடைமுறைக்கான விவாதம் 3:26-4:7

- தேவனுடைய பிள்ளைகளாய் கிறிஸ்துவுக்குள் அவர்கள் ஒன்றாயிருக்கி றார்கள், ஆபிரகாமின் வித்தாய் இருக்கிறார்கள், வாக்குத்தத்தின் சுததந்திரர்களாய் இருக்கிறார்கள் 3:26-29
- நியாயப்பிரமாணத்திலிருந்து மீட்கப்பட்டவர்களாய், பிள்ளைகளாக சுவீகாரம் பெற்றவர்களாய், இனி அடிமைகளாய் இராதவர்களாய், சுதந்திர வாளிகளாய் இருக்கிறார்கள் 4:1-7

உணர்ச்சிவசப்படுகிற விவாதம் 4:8-20

- அவர்கள் மீண்டும் அடிமைத்தனத்திற்கு திரும்புவது குறித்த பவுலின் கவலை 4:8-11
- அவர்களுடனான முன்னாள், இன்னாள் உறவு 4:12-20

கலாத்திய நிருபத்தின் முக்கிய பகுதிகள்

உருவகம் சார்ந்த விவாதம்

- நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிருக்க விரும்புகிறவர்களுக்குக்கான உருவகம் 4:21-24அ
- இரண்டு உடன்படிக்கைகளின் உருவகம்: ஒன்று சீனாய் மலை அது அடிமைத்தனத்திற்கள்ளாக பிள்ளை பெறுதல்: அடுத்தது எருசலேம் அது விடுதலையாக்குகிறது 4:24ஆ-31

சுவிஷேசம் அளிக்கும் விடுதலையில் உறுதியாய் நிற்க அழைப்பு 5:1-6:10

விருத்தசேதனம் செய்யும் கட்டாயத்திலிருந்து விடுதலை 5:1-6

- அடிமைத்தனத்தின் நுகத்தில் பிணைக்கப்படாதிருத்தல் 5:1
- விருத்தசேதனத்தின் வெறுமை, அது கிருபையிலிருந்து விலக்குகிறது 5:2-4
- விசுவாசத்தினால் கிரியை செய்கிற அன்போடு நீதிக்காக நம்பிக்கையுடன் காத்திருக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் 5:5-6

நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதிலிருந்து விடுதலை 5:7-15

- நியாயப்பிரமாணத்தினால் கட்டுகிறவர்களை குறித்து எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் 5:7-12
- உங்களுக்கு கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை அன்புடன் ஒருவருக்கொருவர் உதவிசெய்யத்தக்க சந்தர்ப்பமாக மாற்றுங்கள் அதினால் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் 5:13-14
- ஆனால் அதை மாம்சத்தின் இச்சைக்கு பயன்படுத்தாதிருங்கள், இதனால் ஒருவரை ஒருவர் பட்சித்துப்போடுவீர்கள் 5:13ஆ,15

ஆவியினால் நடத்தப்படும் விடுதலை 5:16-26

- விடுதலை தவறுசெய்வதற்கான அனுமதியல்ல 5:16-18
- மாம்சத்தின் கிரியைகள் ஆவியின் கனிகளுக்கு எதிரானது 5:19-23
- கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தை சிலுவையில் அறைந்தவர்களும், ஆவியில் நடக்கிறவர்களும் 5:24-26

பொறுப்புடன் கூடிய விடுதலை 6:1-10

- பாரத்தோடிருப்பவர்களுக்கு உதவுதல் 6:1-5
- எல்லோருக்கும் நன்மை செய்து ஆவிக்கென்று விதைக்க 6:6-10

முடிவுரை 6:11-18

- விருத்தசேதனத்தால் அடிமைப்படுத்த முயல்வோருக்கு இறுதியான கண்டிப்பு 6:11-13
- கிறிஸ்துவின் சிலுவையின் மீதான பவுலின் நம்பிக்கை 6:14-17
- ஆசீர்வாதம் 6:18